மார்ச் 2020

விண்மீன் .காம்

# முதலாவது வார நடப்பு நிகழ்வுகள்

01 மார்ச் – 07 மார்ச்

www.winmeen.com

## நடப்பு நிகழ்வுகள்

**1.உலகின் இரண்டாவது இளம் கோடீசுவரராக மாறியுள்ள ரித்தேஷ் அகர்வால், எந்த இந்திய துளிர் நிறுவனத்தின் நிறுவனராவார்?**

அ. சொமொடோ

**ஆ. ஓயோ தங்கும் விடுதிகள் ☑**

இ. ஸ்விகி

ஈ. பைஜூஸ்




- அண்மையில் வெளியான, "ஹுருன் உலக பணக்காரர்கள் பட்டியல் – 2020" இன்படி, OYO தாங்கும் விடுதிகளின் நிறுவனர் ரித்தேஷ் அகர்வால் உலகின் இரண்டாவது இளம் கோடீசுவரராக அறிவிக்கப் –பட்டுள்ளார். 24 வயதான அவரின் சொத்து மதிப்பு, $1.1 பில்லியன் டாலராகும். பன்னாட்டளவில், அழகுசாதன நிறுவன உரிமையாளர் கைலி ஜென்னர் (22) முதலிடத்தில் உள்ளார். 40 வயதுக்கு உட்பட்ட சுயமாக முன்னேறி கோடீசுவரராக மாறியுள்ள இந்தியராகவும் அவர் மாறியுள்ளார். அவரைத் தொடர்ந்து ஜெரோதா, பிளிப்கார்ட் மற்றும் பைஜூஸ் நிறுவனர்கள் உள்ளனர்.

**2.சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கான தீர்மானத்தை, சமீபத்தில் நிறைவேற்றிய மாநிலம் எது?**

அ. கேரளம்

**ஆ. பீகார் ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. ஒடிசா



- அண்மையில், மாநிலத்தில் சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கான தீர்மானத்தை பீகார் மாநில சட்டமன்றம் நிறைவேற்றியது. பீகார் மாநில முதலமைச்சர் நிதீஷ்குமார், சட்டசபையில், சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பை முன்மொழிந்தார். அது, ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த முன்மொழிவு நிறைவேற்றப்பட்டதாகவும், இத்தீர்மானம் நடுவண் அரசுக்கு அனுப்பப்படும் என்றும் அம்மாநிலத்தின் சட்டமன்ற அவைத்தலைவர் அறிவித்தார்.

**3.அதிகளவில் கொரோனா வைரஸ் பாதிப்பைக் கண்ட டயமண்ட் இளவரசி பயணக்கப்பல், எந்த நாட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது?**

அ. ஆஸ்திரேலியா

ஆ. சீனா

இ. தென் கொரியா

**ஈ. ஜப்பான் ☑**



❖ பல பயணிகளுக்கும் கப்பல் பணியாளர்களுக்கும் கொடிய கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டபின்னர், 'டயமண்ட் பிரின்ஸஸ்' என்னும் உல்லாசப்பயணக்கப்பல், ஜப்பான் நாட்டின் யோகோகாமா துறைமுகத்தில் தனிமைப்படுத்தப்பட்டது.

❖ அண்மையில், ஒரு சிறப்பு ஏர் இந்தியா விமானம் டோக்கியோவுக்கு புறப்பட்டுச் சென்று, அந்தக்கப்பலில் இருந்த 119 இந்திய நாட்டு குடிமக்களை (113 கப்பல் பணியாளர்கள் மற்றும் 6 பயணிகள்) திரும்ப அழைத்துவந்தது. மேலும், ஐந்து அயல்நாட்டு குடிகளும் அழைத்துவரப்பட்டனர்; அவர்கள் அனைவரும், ஹரியானாவில் இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 4. 'CARO 2020' தொடர்புடைய துறை எது?

அ. கொரோனா வைரஸ் பாதிப்பு

**ஆ. நிறுவனங்களுக்கான விதிமுறைகள் ☑**

இ. தானியங்கி ஊர்தித்துறை மாநாடு

ஈ. மருத்துவ மாநாடு




❖ சமீபத்தில், மத்திய பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகமானது நிறுவனங்கள் (தணிக்கையாளர் அறிக்கை) ஆணை, 2020 (CARO 2020)ஐ அறிவித்தது. அறிவிப்பின்படி, பட்டியலிடப்பட்ட அனைத்து நிறுவனங்களும், தணிக்கையாளருக்கு, இடித்துரைப்பாளரின் (whistle–blower) அனைத்து முறைகேடு புகார்கள் குறித்தும் கட்டாயமாக தெரிவிக்கவேண்டும்.

❖ மேலும், தணிக்கை அறிக்கைகளில் புகார்கள்பற்றி குறிப்பிடப்பட வேண்டும். 2019ஆம் ஆண்டு ஏப்ரல் தொடங்கி அதன்பின்வரும் அனைத்து நிதியாண்டுகளிலும் மேற்கொள்ளப்படும் அனைத்து தணிக்கை –களுக்கும் இந்த ஆணை பொருந்தும்.

## 5. "ஆயுர்வேதம், யுனானி மற்றும் சித்த மருத்துவ முறைகளில் நோயறிதல் & சொற்களஞ்சியங்களைத் தரப்படுத்தல்" குறித்த சர்வதேச மாநாடு நடைபெற்ற நகரம் எது?

அ. லக்னோ

ஆ. கான்பூர்

**இ. புது தில்லி ☑**

ஈ. வாரணாசி




❖ "ஆயுர்வேதம், யுனானி மற்றும் சித்த மருத்துவ முறைகளில் நோயறிதல் & சொற்களஞ்சியங்களைத் தரப்படுத்தல் – ICoSDiTAUS–2020" குறித்த இரண்டு நாள் சர்வதேச மாநாடு சமீபத்தில் புது தில்லியில் நிறைவடைந்தது. "பாரம்பரிய மருத்துவ முறைகளில் நோயறிதல் குறித்த தரவை சேகரித்தல் மற்றும் அவற்றை வகைப்படுத்துதல்பற்றிய புது தில்லி பிரகடனம்" இம்மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த மாநாட்டில் 16 நாடுகள் பங்கேற்றன. நோயறிதல் மற்றும் சொற்களஞ்சியங்களின் தரப்படுத்தலுக்கென அர்ப்பணிக்கப்பட்ட மிகப்பெரிய பன்னாட்டு நிகழ்வு இதுவாகும்.

**6. 2020ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியாவில், எத்தனை மொழிகளுக்கு, 'செம்மொழி' என்னும் தகுதி வழங்கப்பட்டுள்ளது?**

அ. 4

**ஆ. 6 ☑**

இ. 8

ஈ. 10

❖ இந்தியாவில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா & சமற்கிருதம் ஆகிய 6 மொழிகளுக்கு 'செம்மொழி' என்னும் தகுதி வழங்கப்பட்டுள்ளது. அண்மையில், மகாராஷ்டிர மாநில சட்டமன்றத்தின் 2 அவைகளும் ஒருமனதாக தீர்மானங்களை நிறைவேற்றி, மராத்தி மொழிக்கு, 'செம்மொழி' என்னும் தகுதியை வழங்குமாறு நடுவணரசைக்கோரின.

❖ 'செம்மொழி' என அறிவிக்கப்பட்ட மொழிகள் அவற்றின் ஆய்வுக்கென சிறப்பு மையங்களை அமைத்துக் கொள்வது மற்றும் அம்மொழிசார்ந்த அறிஞர்களுக்கு பன்னாட்டு விருதுகளை வழங்குவதுபோன்ற பல்வேறு நன்மைகளைக்கொண்டுள்ளன.

**7.இந்திய பள்ளி மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தொகுதியைத்தொடங்க, NITI ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டத்துடன் அண்மையில் கூட்டிணைந்த சங்கம் எது?**

**அ. NASSCOM ☑**

ஆ. FICCI

இ. CII

ஈ. T-Hub

❖ தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கமானது (NASSCOM) அண்மையில், NITI ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டத்துடன் இணைந்து, இந்திய பள்ளி மாணவர்களுக்கென ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தொகுதியை அறிமுகப்படுத்தியது.

❖ செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான இந்தத் தொகுதி, கிட்டத்தட்ட 5,000 அடல் டிங்கரிங் ஆய்வகங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும் 2.5 மில்லியன் மாணவர்களை இது சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. AI கருத்துருக்களில் செயல்பாடுகள் மற்றும் காணொலிகளைக்கொண்ட இத்தொகுதி, பிப்.27 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.


**8.நடப்பாண்டு (2020) தேசிய அறிவியல் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ. Children in Science

ஆ. Youth in Science

**இ. Women in Science ☑**

ஈ. Artificial Intelligence in Science



❖ சர்.CV.இராமன் நோபல் பரிசுபெறுவதற்கு வழிவகுத்த, "இராமன் விளைவு" கண்டுபிடிக்கப்பட்ட நாளை (28–02–1928) நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் பிப்ரவரி 28ஆம் தேதி தேசிய அறிவியல் நாளாகக் கொண்டாடப்படுகிறது. "அறிவியலில் பெண்கள்" என்பது நடப்பாண்டில் (2020) வரும் தேசிய அறிவியல் நாளுக்கான கருப்பொருளாகும். அன்றைய நாள், 'தேசிய அறிவியல் பிரபலப்படுத்துதல் – National Science Popularization' விருதுகளையும் அரசாங்கம் வழங்குகிறது.

**9.நிலப்பதிவேடுகள் மற்றும் சேவைகள் அட்டவணையை வெளியிடும் அமைப்பு எது?**

**அ. தேசிய பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சிக் கழகம் (NCAER) ☑**

ஆ. இந்திய தொழிற்துறைகள் கூட்டமைப்பு (CII)

இ. இந்திய தரநிலை கழகம் (QCI)

ஈ. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD)

❖ தேசிய பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சிக் கழகம் (NCAER) அண்மையில் NCAER நிலப்பதிவேடுகள் மற்றும் சேவைகள் குறியீட்டை (N–LRSI 2020) வெளியிட்டது. இந்தக் குறியீட்டின்படி, மத்திய பிரதேசம், ஒடிசா, மகாராஷ்டிரா, சத்தீசுகர் மற்றும் தமிழ்நாடு ஆகியவை சிறப்பாக செயல்படும் 5 மாநிலங்களாகும். 33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நிலப்பதிவேடுகளின் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் அவற்றின் தரத்தை இந்தக் குறியீடு மதிப்பீடு செய்கிறது.

**10.அண்மையில், 2 கோடி வாடிக்கையாளர்களைக் கடந்த இந்திய கொடுப்பனவு (payment) வங்கி எது?**

அ. ஏர்டெல் கொடுப்பனவு வங்கி

**ஆ. இந்திய அஞ்சல்துறை கொடுப்பனவுவங்கி ☑**

இ. பினோ கொடுப்பனவு வங்கி

ஈ. பேடிஎம் கொடுப்பனவு வங்கி

❖ இந்திய அஞ்சல்துறை கொடுப்பனவுவங்கி (IPPB) வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மிகக்குறுகிய காலத்தில் 2 கோடியை கடந்து சாதனை படைத்துள்ளது. அனைவருக்கும் நிதி சேவைகள் கிடைக்க வேண்டும் என்ற அரசின் நன்னோக்கத்தின் அடிப்படையில், கடந்த 2018 செப்டம்பர்.1 அன்று இந்தியப் பிரதமரால் IPPB தொடங்கி வைக்கப்பட்டது. கடந்த 2019 செப்டம்பரில், ஆதார் அடிப்படையிலான சேவையை IPPB தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கியது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- பத்திரப்பதிவுக்கு முன்பே நிலங்களை உட்பிரிவு செய்து அதற்கு அங்கீகாரம் அளிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இப்புதிய திட்டம், சோதனை அடிப்படையில் முதற்கட்டமாக, கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி மற்றும் ஓசூர் வட்டங்களிலும், பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய வட்டங்களிலும் அறிமுகம் செய்யப்படுகிறது.


- இந்திய தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் பாதுகாப்பு, தீயணைப்பு மற்றும் அவசரகால உதவித்துறையில் அமைப்பு மற்றும் தனிநபர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், "ஃபிஸ்ட்" விருது வழங்கப்படுகிறது. அவ்வகையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்டப்பணிக – ளைப் பாராட்டி அச்சங்கம் சார்பில் "ஃபிஸ்ட்" விருது தில்லியில் நடந்த விழாவில் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர், உதகமண்டலம், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், அரியலூர், கள்ளக்குறிச்சி ஆகிய 11 இடங்களில் புதிய மருத்துவக்கல்லூரிகள் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்திய அரசின் 60% நிதி மற்றும் மாநில அரசின் 40% நிதியில் இந்தக் கல்லூரிகள் தலா ரூ.325 கோடியில் கட்டப்படவுள்ளன. இந்நிலையில், இராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அமையவுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு முதலமைச்சர் பழனிசாமி மார்ச்.1 அன்று அடிக்கல் நாட்டினார்.

- இந்திய தொழிலகக்கூட்டமைப்பின் (CII) தமிழ்நாட்டுப் பிரிவின் தலைவராக ஹரி K தியாகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல், CII தமிழ்நாட்டுப் பிரிவின் துணைத்தலைவராக S சந்திரகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

## நடப்பு நிகழ்வுகள்

### 1. 'வரையறுத்தல் – Delimitation' என்ற சொல், எந்தச் செயல்முறையுடன் தொடர்புடையது?



அ. வருமான வரிக்கான வரம்புகளை நிர்ணயித்தல்

ஆ. கட்டுப்படியாகக்கூடிய வீட்டுவசதிக்கான வரம்புகளை நிர்ணயித்தல்

**இ. பிராந்திய தொகுதிக்கான வரம்புகளை நிர்ணயித்தல் ☑**

ஈ. தலைவர் சம்பளத்துக்கான வரம்புகளை நிர்ணயித்தல்

- ❖ 'வரையறுத்தல்' என்பது சட்டமன்ற அமைப்பைக்கொண்ட ஒரு நாட்டில், பிராந்தியத் தொகுதிகளின் வரம்புகளை நிர்ணயிக்கும் செயல்முறையாகும். பாதுகாப்புப் பிரச்சனைகள் காரணமாக அஸ்ஸாம், நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் அருணாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தொகுதி வரையறுத்தல் பணியை ஒத்திவைத்த முந்தைய அறிவிப்புகளை அரசாங்கம் அண்மையில் இரத்து செய்தது.

- ❖ மக்களவை & மாநில சட்டமன்றத் தேர்தல்களின் நோக்கத்திற்காக, 2001ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு புள்ளிவிவரங்களின் அடிப்படையில், ஒவ்வொரு மாநிலத்தையும் பிராந்தியத் தொகுதிகளாக பிரித்து சரிசெய்யும் பணி, இந்நான்கு மாநிலங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 2.சட்டமன்ற உறுப்பினர்களின் (MLA) தொகுதி வளர்ச்சி நிதியை, ஆண்டுக்கு ₹3 கோடியாக உயர்த்திய மாநிலம் எது?

அ. கேரளம்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. ஒடிசா

- ❖ ஆண்டுக்கு ₹2 கோடி என்றிருந்த உத்தரபிரதேச மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சி நிதியானது, இனி, ஆண்டுக்கு ₹3 கோடியாக உயர்த்தி வழங்கப்படும் என அம்மாநில சட்டசபைத் தலைவர் அறிவித்துள்ளார். இதன்மூலம், தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி நடவடிக்கைகள் மேலும் விரைவுபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2018ஆம் ஆண்டில், இந்த நிதியை ஆண்டுக்கு ₹1.5 கோடியிலிருந்து ₹2 கோடியாக உயர்த்தியது குறிப்பிடத்தக்கது.

### 3.நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த முதல் சோதனை அடிப்படையிலான திட்டத்திற்கு, எந்த யூனியன் பிரதேசத்தை NITI ஆயோக் தேர்ந்தெடுத்துள்ளது?

**அ. ஜம்மு காஷ்மீர் ☑**

ஆ. கோவா

இ. இலட்சத்தீவுகள்

ஈ. சண்டிகர்

- நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த முதல் சோதனை அடிப்படையிலான திட்டத்திற்காக, யூனியன் பிரதேசமான ஜம்மு–காஷ்மீரை NITI ஆயோக் தெரிவுசெய்துள்ளது. இதன்மூலம், ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்துடன் (UNDP) பணியாற்றுவதற்கான ஒரு நல்வாய்ப்பை ஜம்மு காஷ்மீர் பெறும். இத் திட்டத்தின்கீழ், சில அளவுருக்களின் (parameters) அடிப்படையில் தரநிலைகளை வழங்குவதற்காக மாவட்ட ஆணையர்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்படும்.

**4.மத்திய புள்ளிவிவர அலுவலகம் (CSO) வெளியிட்ட இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2019–20ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி என்ன?**

அ. 4.8%

ஆ. 5% ☑

இ. 5.2%

ஈ. 5.4%

- மத்திய புள்ளிவிவர அலுவலகம் (CSO), சமீபத்தில், 2019 அக்டோபர்–டிசம்பர் காலாண்டிற்கான (2019–20 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டு) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சித் தரவை வெளியிட்டது. மூன்றாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 4.7 சதவீதமாக இருந்தாக இத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- இது, முந்தைய காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியான 4.5 சதவீதத்தைவிட சற்று கூடுதலாகும். இத்தரவுகளின்படி, 2019–20 நிதியாண்டில், பொருளாதார வளர்ச்சிக்கான கணிப்புகள் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகளில், 5 சதவீதமாக தக்கவைக்கப்பட்டுள்ளன.

**5. 'புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேலாண்மை மையம்' என்னும் திட்டத்தை செயல்படுத்தும் பொதுத்துறை நிறுவனம் எது?**

அ. பவர் கிரிட் கார்ப்பரேஷன் ☑

ஆ. NHPC நிறுவனம்

இ. NTPC நிறுவனம்

ஈ. இந்திய சூரிய மின்னாற்றல் கழகம்

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஒருங்கிணைப்புக்காக, பதினொரு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேலாண்மை மையங்களை (**R**enewable **E**nergy **M**anagement **C**entres – **REMC**) மத்திய மின்துறை அமைச்சர் R K சிங் திறந்துவைத்தார். வடக்கு பிராந்திய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேலாண்மை மையத்தையும் (NR–REMC) அவர் அப்போது திறந்துவைத்தார்.

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேலாண்மை மையங்களை மத்திய அரசின் திட்டமாக செயல்படுத்துவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய மின்சார அமைச்சகத்தின்கீழ், 'மகாரத்னா' தகுதியுடைய பவர் கிரிட் நிறுவனம் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**6.** **2020 – உலக உற்பத்தித்திறன் மாநாட்டை நடத்தும் இந்திய நகரம் எது?**

அ. மும்பை

**ஆ. பெங்களூரு ☑**

இ. லக்னோ

ஈ. ஜெய்ப்பூர்

❖ உலக உற்பத்தித்திறன் மாநாட்டின் 19ஆவது பதிப்பானது, வரும் 2020 மே 6–8 வரை பெங்களூரில், சுமார் 45 ஆண்டுகால இடைவெளிக்குப்பிறகு நடைபெறவுள்ளது. கடந்த 1969ஆம் ஆண்டு முதல், உலக உற்பத்தித்திறன் அறிவியல் கூட்டமைப்பால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கடைசியாக 1974ஆம் ஆண்டில், இந்தியாவில், இம்மாநாடு நடைபெற்றது. விளக்கக்காட்சிகள், உரைகள் மற்றும் குழு விவாதங்கள்மூலம் உற்பத்தி அறிவியலின் வளர்ச்சியை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

**7.** **சமீபத்திய அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற பால் பியா, எந்த ஆப்பிரிக்க நாட்டின் தற்போதைய அதிபராக உள்ளார்?**

அ. நைஜீரியா

**ஆ. கேமரூன் ☑**

இ. பெனின்

ஈ. எகிப்து



❖ கடந்த 37 ஆண்டுகளாக மத்திய ஆப்பிரிக்க நாடான கேமரூனின் அதிபராக இருந்துவரும் பால் பியா, அண்மையில் அந்நாட்டில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் முழுமையான பெரும்பான்மையைப்பெற்று வெற்றிபெற்றார். அவரது கட்சியான கேமரூன் மக்கள் ஜனநாயக இயக்கம், முடிவுகள் அறிவிக்கப்பட்ட 167 இடங்களில் 139 இடங்களை வென்றது. உலகின் மிகநீண்டகாலம் அரசவழி சார்பு அல்லாத ஓர் ஆட்சியாளராக பால் பியா திகழ்ந்து வருகிறார்.


**8.** **அண்மையில் காலமான Dr. S. ஷெட்டர், எந்தத் தொழிலுடன் தொடர்புடையவர்?**

அ. அறிவியலாளர்

**ஆ. வரலாற்றாசிரியர் ☑**

இ. தொல்பொருள் ஆய்வாளர்

ஈ. பறவையியலாளர்



❖ மூத்த வரலாற்றாசிரியர் Dr. S. ஷெட்டர் (85), அண்மையில், கர்நாடகத்தின் பெங்களூரில் காலமானார். இருபத்தைந்தாண்டுகளுக்கும் மேலாக பல்வேறு பல்கலைக்கழகங்களில் வரலாற்றாசிரியராக இவர் பணிபுரிந்துள்ளார். இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் Ph.D பட்டம் பெற்றவர் Dr. S. ஷெட்டர். தார்வாட் கர்நாடக பல்கலைக்கழகத்தில் உள்ள இந்திய கலை வரலாற்று நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் புது தில்லியில் உள்ள இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் உட்பட பல்வேறு முக்கியப்பதவிகளை அவர் வகித்துள்ளார்.

**9. 'புந்தேல்கண்ட் விரைவு நெடுஞ்சாலை' அமையவுள்ள மாநிலம் எது?**

அ. மத்திய பிரதேசம்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. உத்தரகண்ட்

ஈ. பீகார்



❖ கடந்த 2018 பிப்ரவரி மாதம் அறிவிக்கப்பட்ட, உத்தரப்பிரதேச பாதுகாப்புத் தொழில் வழித்தட பகுதியில் வசதிகளை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில், 296 கி.மீ., நீளங்கொண்ட, 'புந்தேல்கண்ட் விரைவு நெடுஞ்சாலை' திட்டத்துக்கு சித்ரகூட்டில் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இந்த முன்மொழியப்பட்ட விரைவு நெடுஞ்சாலை பின்தங்கிய பிராந்தியத்தை தேசிய தலைநகர் பிராந்தியத்துடன் இணைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ₹10,000 கோடி மதிப்பிலான இப்'புந்தேல்கண்ட் விரைவு நெடுஞ்சாலை'த் திட்டத்துக்கு கடந்த ஆண்டு உத்தரபிரதேச மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**10. அண்மையில் நாடு முழுவதும் 10000 FPO'களை பிரதமர் தொடங்கிவைத்தார். இதில் FPO என்பது எதைக்குறிக்கிறது?**

அ. Farmer Priority Organisations

**ஆ. Farmer Produce Organisations ☑**

இ. Farmer Productivity Organisations

ஈ. Farmer Primary Organisations



❖ வேளாண் மற்றும் உழவர்நல அமைச்சகத்தின்கீழுள்ள சிறு, குறு விவசாயிகளின் வேளாண் வணிக கூட்டமைப்பால் உழவர் உற்பத்தி அமைப்புகள் (FPO) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சிறு, குறு மற்றும் நிலமற்ற உழவர்களை தொகுப்பதற்கு இந்த உழவர் உற்பத்தி அமைப்புகள் உதவுகின்றன. மேலும், தொழில்நுட்பம், தரமான விதை, உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை பெறுவதற்கும் உதவுகின்றன. அண்மையில், பிரதமர் நரேந்திர மோடி, உத்தரபிரதேச மாநிலத்தின் சித்ரகூட்டிலிருந்து நாடுமுழுவதும் 10,000 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை தொடங்கிவைத்தார்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை வழங்கும் உ.வே.சா. உலகத்தமிழ் விருதுக்கு வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியின் தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் தி.மு.அப்துல்காதர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 'சிலப்பதிகாரத்தில் அறக்கோட்பாடு' என்னும் தலைப்பில் 2019ஆம் ஆண்டுக்கான ஆய்வுரைப்போட்டி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

❖ தமிழ்நாட்டில், முன்கூட்டியே மின்கட்டணம் செலுத்துவோருக்கு, மின்வாரியம் வழங்கும் வட்டியை, 3.25 சதவீதமாக குறைத்து, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் வளரிளம்பருவப்பெண்களுக்கு ஊட்டச்சத்து ஆதரவை வழங்குவதை நோக்கமாகக்கொண்டு, அண்மையில் தொடங்கப்பட்ட திட்டத்தின் பெயரென்ன?**

அ. பிரதான் மந்திரி சுபோஷித் யோஜனா

**ஆ. சுபோஷித் மா அபியான் ☑**

இ. சுபோஷித் ஜனனி யோஜனா

ஈ. சுபோஷித் பேட்டி அபியான்



❖ கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் வளரிளம்பருவப்பெண்களுக்கு ஊட்டச்சத்து ஆதரவை வழங்குவதை நோக்கமாகக்கொண்ட, "சுபோஷித் மா அபியான்" என்ற திட்டத்தை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா சமீபத்தில் தொடங்கிவைத்தார். மக்களவைத்தலைவரின் நாடாளுமன்றத் தொகுதியான இராஜஸ்தான் மாநிலம் கோட்டாவிலிருந்து இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதன் தொடக்க நிகழ்வில், மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானியும் கலந்துகொண்டார்.

**2.ஆறு தூய்மைப்படுத்தும் நிகழ்வில், நார்வே அமைச்சருடன் இணைந்து பங்கேற்றதற்காக அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சுற்றுச்சூழல் ஆர்வலர் அப்ரோஸ் ஷா, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**

அ. கேரளம்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. ஒடிசா



❖ நார்வேயின் பன்னாட்டு வளர்ச்சி அமைச்சர் டாக்–இங் உல்ஸ்டீன் தனது 3 நாள் இந்திய பயணத்தின் போது, மகாராஷ்டிர மாநிலம் மும்பையைச்சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலரான அப்ரோஸ் ஷாவுடன் இணைந்து 'மிதி'யாற்றைத் தூய்மைப்படுத்தும் பணியில் பங்கேற்றார். பேரளவிலான கடற்கரை தூய்மைப்படுத்தும் இயக்கத்தை ஏற்பாடு செய்ததற்காக, கடந்த 2016ஆம் ஆண்டில் அப்ரோஸ் ஷாவுக்கு 'ஐ.நா புவியின் சாம்பியன்' விருது வழங்கப்பட்டது. இதற்குமுன்பு அவர், கடற்கரையைத் தூய்மை செய்யும் திட்டத்திற்காக நார்வே சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

**3. DRDO மற்றும் இந்திய அறிவியல் கழகத்தின் ஆய்வகமான HEMRLஆல் சமீபத்தில் உருவாக்கப்பட்ட 'RaIDer–X' என்பது என்ன?**

அ. பீரங்கி துப்பாக்கி

**ஆ. வெடிபொருள் கண்டறி சாதனம் ☑**

இ. துப்பாக்கிச்சூடு நிகழ்விடங்காட்டி

ஈ. குண்டு துளைக்காத கவச உடை



❖ 'RaIDer–X' என்பது ஒரு புதிய வெடிபொருள் கண்டறி சாதனமாகும். அண்மையில் இது, புனேவில் நடைபெற்ற தேசிய வெடிபொருள் கண்டறிதலுக்கான பயிலரங்கின்போது வெளியிடப்பட்டது. இதனை

புனேவில் அமைந்துள்ள DRDO–உயராற்றல் பொருட்கள் ஆராய்ச்சி ஆய்வகமும் (HEMRL) பெங்களூரில் அமைந்துள்ள இந்திய அறிவியல் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன.

❖ இந்தச் சாதனத்தால் ஒரு குறிப்பிட்ட தொலைவிலிருந்து வெடிபொருட்களை கண்டறியவியலும் என்றும் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிபொருட்களையும் இதால் கண்டறிய முடியும் எனக் கூறப்படுகிறது. தூய்மையற்ற நிலையில் உள்ள வெடிபொருட்களைக்கண்டறியும் வகையிலும் இந்தச் சாதனத்தை வடிவமைக்க முடியும்.

**4.பாதுகாப்பு மற்றும் உத்திசார் ஆய்வுகள் துறையில் முன்மொழியப்பட்டுள்ள, 'சிறப்பு இருக்கை – Chair of Excellence'க்கு, எந்த இந்திய விமானப்படைத்தலைவரின் பெயர் சூட்டப்படவுள்ளது?**

அ. R K S பதாரியா

**ஆ. அர்ஜன் சிங் ☑**

இ. நார்மன் பிரவுன்

ஈ. பிரதாப் சந்திர லால்



❖ பாதுகாப்பு மற்றும் உத்திசார் ஆய்வுகள் துறையில், 'சிறப்பு இருக்கை' அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அண்மையில் இந்திய விமானப்படையும் சாவித்ரிபாய் புலே புனே பல்கலைக்கழகமும் கையெழுத்திட்டன. 5 நட்சத்திர தரவரிசைகொண்ட ஒரே IAF அதிகாரி அர்ஜன் சிங்கின் நூற்றாண்டு பிறந்த ஆண்டை நினைவுகூரும் வகையில், புதிதாக உருவாக்கப்பட்ட அவ்விருக்கைக்கு, 'வான்படை தலைவர் அர்ஜன் சிங் தலைமையின் சிறப்பு இருக்கை' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

❖ IAF அதிகாரிகளுக்கு பாதுகாப்பு & உத்திசார் ஆய்வுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் உயர்கல்வி மற்றும் முனைவர் ஆய்வுகளைத் தொடருவதற்கு இவ்விருக்கை உதவும்.

**5.உணவு வணிகநிறுவனங்கள், இணையவழியில், சுகாதார மதிப்பீடற்ற உணவுகளை விநியோகிக்க தடைவிதித்து அண்மையில் உத்தரவிட்ட மாநில அரசு எது?**

அ. கேரளம்

ஆ. ஒடிசா

**இ. பஞ்சாப் ☑**

ஈ. இராஜஸ்தான்




❖ உணவு வணிகநிறுவனங்கள், இணையவழியில், சுகாதார மதிப்பீடற்ற உணவுகளை விநியோகிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக பஞ்சாப் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் அண்மையில் அறிவித்தது. இணையவழி உணவு விநியோக ஒருங்கிணைப்பாளர்கள், உணவு வணிகநிறுவனங்களிடமிருந்து மதிப்பீடு இல்லாமல் உணவுகளைக் கொண்டுவருவதையும் அம்மாநில அரசு தடைசெய்துள்ளது.

❖ வரும் ஏப்ரல் 30 முதல் ஓராண்டு காலத்திற்கு, இத்தடை உத்தரவுகள் மாநிலத்தில் அமலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**6.அண்மையில், எந்த நாட்டின் புதிய பிரதமராக முகைதீன் யாசின் பதவியேற்றுக்கொண்டார்?**



அ. கத்தார்

**ஆ. மலேசியா ☑**

இ. ஈரான்

ஈ. சவுதி அரேபியா

❖ மலேசியாவின் முன்னாள் துணைப்பிரதமரான முகைதீன் யாசின் சமீபத்தில் நாட்டின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார். இந்நியமனத்தை மலேசியாவின் மன்னர் சுல்தான் அப்துல்லா சுல்தான் அகமது ஷா அறிவித்தார். முகைதீன் யாசின் சமீபத்தில் புதிய பிரதமராக பதவியேற்றுக்கொண்டார்.

❖ கடந்த வாரம் பிரதம அமைச்சர் பதவியிலிருந்து விலகிய மகாதீர் முகமதுவைத் தொடர்ந்து, முகைதீன் யாசின் அப்பதவிக்கு வந்துள்ளார்.

**7. ICAR – இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த, 'பூசா வேளாண் அறிவியல் விழா – 2020'ஐ நடத்திய நகரம் எது?**



அ. லக்னோ

**ஆ. புது தில்லி ☑**

இ. நாக்பூர்

ஈ. ஹைதராபாத்

❖ 'பூசா வேளாண் அறிவியல் விழா'வானது ICAR–IARIஆல் (இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம் – இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்) புது தில்லியில் மார்ச் 1–3 வரை ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வு, புது தில்லியில் அமைந்துள்ள ICAR–IARI விழா மைதானத்தில் நடத்தப்பட்டது.

❖ ஜம்மு–காஷ்மீரின் தோடா மாவட்டத்தைச்சேர்ந்த உழவர் பாரத் பூஷன் (42), இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தால், 'புத்தாக்க உழவர் விருது'க்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இந்நிகழ்வின்போது புத்தாக்கம் நிறைந்த வேளாண் பெருமக்கள் பாராட்டப்படுகிறார்கள்.

**8.கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டு–2020இல் வென்ற இந்திய பல்கலைக்கழகம் எது?**




அ. சாவித்திரிபாய் புலே புனே பல்கலைக்கழகம்

**ஆ. பஞ்சாப் பல்கலைக்கழகம் ☑**

இ. மெட்ராஸ் பல்கலைக்கழகம்

ஈ. ஆந்திர பல்கலைக்கழகம்

❖ கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க பதிப்பு, மார்ச் 1 அன்று ஒடிசா மாநிலம் புவனேசுவரில் நிறைவடைந்தது. மொத்தம் 46 பதக்கங்களுள் 17 தங்கப்பதக்கங்களை வென்று பஞ்சாப் பல்கலைக்கழகம் சாம்பியனாக முடிசூட்டப்பட்டது.

❖ புனேவின் சாவித்திரிபாய் புலே பல்கலைக்கழகம், மொத்தம் 37 பதக்கங்களுடன் இரண்டாமிடத்தைப் பெற்றது. மூன்றாமிடத்தை பஞ்சாபி பல்கலைக்கழகம் பெற்றது. பிரபல தடகள வீராங்கனை டூட்டீ சந்த், 100 மீ., ஓட்டப்பந்தயத்தில் புதிய தேசிய பல்கலைக்கழக சாதனையை படைத்து 100 மீ., மற்றும் 200 மீ., ஓட்டப்பந்தயங்களில் தங்கப்பதக்கம் வென்றார்.

**9. ஆண்டுதோறும், 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள் – Zero Discrimination Day' அனுசரிக்கப்படும் தேதி எது?**

அ. மார்ச் 1 ☑

ஆ. மார்ச் 2

இ. மார்ச் 3

ஈ. மார்ச் 4




❖ ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 1 அன்று UNAIDSஆல் உலகம் முழுவதும் 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிறது. 2030ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸை ஒரு பொது சுகாதார அச்சுறுத்தலாக எண்ணி அதனை முடிவுக்குக்கொண்டுவருவதை நோக்கமாகக்கொண்ட ஐ.நா அமைப்புதான் இந்த UNAIDS.

❖ இந்நாளில், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்குக்கொண்டுவரவும், சம உரிமைகள், வாய்ப்புகள் மற்றும் சிகிச்சைக்காகவும் UNAIDS அழைப்புவிடுத்துள்ளது. "பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள் ஒழிப்பு – Zero Discrimination Against Women and Girls" என்பது இந்த ஆண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**10. அண்மையில் காலமான ரிச்சர்ட் ஜான் பைஸ் தொடர்புடைய துறை எது?**

அ. விளையாட்டு

**ஆ. இலக்கியம் ☑**

இ. அரசியல்

ஈ. வணிகம்



❖ மூத்த கொங்கனி மொழி எழுத்தாளரும் நாடக ஆசிரியருமான ரிச்சர்ட் ஜான் பைஸ் (51) அண்மையில் காலமானார். கொங்கனி மொழியில் பல சிறுகதைகள், நையாண்டி கட்டுரைகள் மற்றும் கவிதைகளை அவர் எழுதியுள்ளார். ரிச்சர்டுக்கு அவரது 'Fathor' என்னும் இலக்கியப்படைப்புக்காக, 'T M A பை' விருது வழங்கப்பட்டது. அவரது பல நாடகங்கள் கொங்கனி நாடக அரங்குகளில் அரங்கேற்றப்பட்டுள்ளன. 'டைஜிவேர்ல்ட்' என்ற செய்தித்தளத்தின் தலையங்கத் தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- மத்திய சுகாதாரம் & குடும்பநலத்துறை அமைச்சர் Dr. ஹர்ஷ்வர்தன் தலைமையில், இராமநாதபுரத்தில் புதிய அரசு மருத்துவக்கல்லூரிக்கு முதலமைச்சர் பழனிசாமி அடிக்கல் நாட்டினார். விருதுநகரில் புதிய அரசு மருத்துவக்கல்லூரிக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.

- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை சார்பில் ₹2,857 கோடி மதிப்பில், 'தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்ட'த்தை முதலமைச்சர் பழனிசாமி தொடங்கிவைத்தார். இந்தத் திட்டத்திற்கான உலக வங்கியின் பங்கு 1999.902 கோடி ரூபாயாகும்.
    - இத்திட்டத்தின் முக்கியகுறிக்கோள்கள் மேம்படுத்தப்பட்ட தரமான சிகிச்சை, தொற்றாநோய்கள் மற்றும் காயங்களுக்கான மேம்படுத்தப்பட்ட மேலாண்மை, பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நீக்குதல் ஆகியன ஆகும்.
    - இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மருத்துவ மையங்களிலும், அதாவது அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலிருந்து, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரை மேற்கொள்ளப்படவுள்ளது.

- மேட்டூர் அணையிலிருந்து வெளியேறும் உபரிநீரைக் கொண்டு, சேலம் மாவட்டத்தில் உள்ள 100 ஏரி, குளங்களை நிரப்பும், 'மேட்டூர் – சரபங்கா நீரேற்ற' திட்டத்துக்கு முதலமைச்சர் பழனிசாமி அடிக்கல் நாட்டினார். இதன்மூலம் ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி ஆகிய 4 தாலுகாக்களில் உள்ள 1,500 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும். வறட்சிக்கு உள்ளான நங்கவள்ளி, மேச்சேரி, தாரமங்கலம், ஓமலூர், கெங்கவல்லி, எடப்பாடி ஆகிய ஒன்றிய பகுதிகளில் உள்ள நிலங்களும் பாசன வசதிபெறும்.

- கிருஷ்ணகிரியில் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு, முதலமைச்சர் பழனிசாமி அடிக்கல் நாட்டினார். கிருஷ்ணகிரி–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் போலுப்பள்ளி பகுதியில், ₹348 கோடி மதிப்பில் புதிய அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை அமையவுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில், சுற்றுச்சூழல் உணர்திறன்மிக்க மண்டலமாக அறிவிக்கப்பட்ட சரணாலயம் எது?**

**அ. தேசிய சம்பல் சரணாலயம் ☑**

ஆ. கிர் வனவுயிரி சரணாலயம்

இ. பெரியாறு வனவுயிரி சரணாலயம்

ஈ. கார்பெட் தேசியப்பூங்கா



❖ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்ட அண்மைய அறிக்கையில், தேசிய சம்பல் சரணாலயம், சுற்றுச்சூழல் உணர்திறன்மிக்க மண்டலமாக (Eco–Sensitive Zone) அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் அமைந்துள்ள இச்சரணாலயம் 75% சொம்புமூக்கு முதலைகள், நன்னீர் கங்கை ஓங்கில்கள், நன்னீர் ஆமைகள் மற்றும் 180'க்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த பறவையினங்களுக்கு வாழ்விடமா உள்ளது.

❖ சுற்றுச்சூழல் உணர்திறன்மிக்க மண்டலத்தில் (ESZ) உள்ள பகுதிகள் வணிகம், குடியிருப்பு அல்லது தொழிற்துறை சார்ந்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாது என அவ்வுத்தரவில் கூறப்பட்டுள்ளது.

**2. "EKAM Fest" என்னும் கண்காட்சியை ஏற்பாடு செய்த மத்திய அமைச்சகம் எது?**

அ. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம்

**ஆ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ. ஜவுளி அமைச்சகம்

ஈ. எஃகு அமைச்சகம்



❖ மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின்கீழ், தேசிய மாற்றுத்திறனாளிகள் நிதி மேம்பாட்டுக்கழகம் (NHFDC) ஏற்பாடுசெய்த, "EKAM Fest" என்ற ஏழு நாள் கண்காட்சியானது சமீபத்தில் புது தில்லியில் தொடங்கியது. இது, மார்ச் 2–9 வரை பொதுமக்களின் பார்வைக்கு திறந்திருக்கும். 17 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களைச்சேர்ந்த 82'க்கும் மேற்பட்ட மாற்றுத்திறன்கொண்ட ஆண்கள் மற்றும் பெண்கள் தங்கள் தயாரிப்புகளை இதில் காட்சிப்படுத்துகின்றனர்.

❖ NHFDC ஸ்வாவலம்பன் மையம், தில்லியில் பாதுகாப்பான வண்டிகள் மற்றும் இந்தூர் பாதுகாப்பான குடிநீர் மின்–வண்டிகள் போன்ற பல முயற்சிகளை NHFDC இவ்விழாவில் அறிமுகப்படுத்தியுள்ளது.

**3.மார்ச் 2020 நிலவரப்படி, நட்சத்திரக்குறியிடல் திட்டத்தின்கீழ், எத்தனை சாதனங்களை, எரிசக்தித் திறன் செயலகம் (BEE) உள்ளடக்கியுள்ளது?**

அ. 16

**ஆ. 26 ☑**

இ. 36

ஈ. 46



- ஆற்றல் சேமிப்புச் சட்டம், 2001இன்கீழ், நட்சத்திரக் குறியிடல் திட்டத்தை (Star Labelling Programme) எரிசக்தித்திறன் செயலகம் (BEE) உருவாக்கியுள்ளது. அண்மையில், BEE அதன் 19ஆவது நிறுவன நாளில், தனது நட்சத்திரக் குறியிடலை மேலும் இரண்டு சாதனங்களுக்கு விரிவுபடுத்தியது. அவை, ஆழ் உறைப்பெட்டகம் மற்றும் இலகுரக வணிகப் பயன்பாட்டுக்கான காற்றுப்பதனாக்கி.

- தற்போது இந்தத்திட்டத்தின்கீழுள்ள மொத்த சாதனங்களின் எண்ணிக்கை 26 ஆகும். எரிசக்தித்திறன் குறித்த 'உர்ஜா தக்ஷதா தகவல் கருவி' என்னும் தரவுத்தளத்தை உலக வள நிறுவனத்துடன் (World Resources Institute) இணைந்து BEE தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**4.பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு (OECD) மதிப்பிட்டுள்ளபடி, 2020–21ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 4.6 %

ஆ. 4.8 %

**இ. 5.1 % ☑**

ஈ. 5.4 %

- 2020–21ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சிக்கணிப்பை முந்தைய கணிப்பான 6.2 சதவீதத்திலிருந்து 5.1 சதவீதமாக OECD நிறுவனம் குறைத்துள்ளது. 2019 மார்ச் மாதத்துடன் நிறைவடையும் இந்நிதியாண்டில், வளர்ச்சி விகிதம் 4.9% சதவீதமாக இருக்கும் என OECD கணித்துள்ளது. இந்த விகிதங்களைக் குறைப்பதற்கான மிகமுக்கியக்காரணமாக கொரோனா வைரஸின் தாக்கம் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தியாவின் பொருளாதாரம் அடுத்துவரும் 2021–22ஆம் ஆண்டில் 5.6% ஆக மேம்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

**5.லுலு குழுமத்தின் தலைவர் M A யூசுப் அலி, எந்நாட்டின் நிரந்தர வசிப்பிட அனுமதிப்பத்திரத்தைப்பெற்ற முதல் இந்தியராக ஆனார்?**



அ. ஐக்கிய அரபு அமீரகம்

ஆ. கத்தார்

**இ. சவூதி அரேபியா ☑**

ஈ. ஓமான்

- லுலு குழுமத்தின் தலைவர் M A யூசுப் அலி, அண்மையில், சவூதி அரேபியாவின் நிரந்தர வசிப்பிட அனுமதிப்பத்திரத்தைப்பெற்ற முதல் இந்தியரானார். அபுதாபியைச் சார்ந்த இந்திய சில்லறை வணிக நபரும், கடந்த ஆண்டின் போர்ப்ஸ் இதழால், ஐக்கிய அரபு அமீரகத்தில் (UAE) வசித்துவரும் பணக்கார அயல்நாட்டவராகவும் இவர் மதிப்பிடப்பட்டார். சவூதி நிரந்தர குடியிருப்பு அனுமதி என்றழைக்கப்படும் இது, வெளிநாட்டவர்களுக்கு ஓர் ஆதரவாளரின் தேவையில்லாமல் நாட்டில் வாழ, பணிபுரிய மற்றும் சொந்த வணிக மற்றும் சொத்துக்கான உரிமையை வழங்குகிறது.


## 6. 'ஹம்சாபர்' என்ற அலைபேசி செயலி தொடர்புடைய சேவை எது?

அ. பயணம்

**ஆ. வீட்டிற்கே வந்து எரிபொருள் வழங்குதல் ☑**

இ. வீட்டிற்கே வந்து மருந்துகள் வழங்குதல்

ஈ. வானூர்தி பயணச்சீட்டுக்களை முன்பதிவு செய்தல்




❖ பணியாளர் நலன் அமைச்சர் சந்தோஷ் கங்வார், அண்மையில், 'ஹம்சாபர் – Humsafar' என்னும் அலைபேசி செயலியை அறிமுகப்படுத்திவைத்தார். தேசிய தலைநகரப் பகுதியில் அமைந்துள்ள வீட்டு வசதி சங்கங்கள், உணவகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு நேரடியாகச்சென்று எரிபொருளை வழங்கும் நோக்கத்துடன் இச்செயலி தொடங்கப்பட்டுள்ளது. மொத்தமாக எரிபொருள் வாங்குவோருக்கு எரிபொருள் கிடைப்பை இது உறுதிசெய்யும். இந்த நடவடிக்கை, நகரத்தில் எரிபொருளைக் கொண்டு செல்வதற்கான பாதுகாப்பற்ற நடைமுறைகளைத் தடுக்கும்.

## 7.எந்தப் பன்னாட்டு நுகர்வோர் மின்னணு நிறுவனத்தின் அடுத்த தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக பெக்கா லண்ட்மார்க் தேர்வுசெய்யப்பட்டுள்ளார்?

அ. சாம்சங்

**ஆ. நோக்கியா ☑**

இ. ஹவாய்

ஈ. மோட்டோரோலா



❖ இராஜீவ் சூரிக்கு அடுத்தபடியாக தனது அடுத்த தலைவராகவும் தலைமைச் செயல் அதிகாரியாகவும் பெக்கா லண்ட்மார்க்கை அதன் இயக்குநர்கள் குழு நியமித்துள்ளதாக முன்னணி தொலைத்தொடர்பு & நுகர்வோர் மின்னணு நிறுவனமான நோக்கியா அறிவித்துள்ளது. இராஜீவ் சூரி தனது தற்போதைய பதவியிலிருந்து வரும் 2020 ஆகஸ்ட்.31 அன்று விலகுவதோடு நோக்கியா வாரியத்தின் ஆலோசகராக 2021 ஜனவரி.1 வரை இருக்கவுள்ளார். பெக்கா, வரும் 2020 செப்டம்பரில் பொறுப்பேற்றுக்கொள்வார்.


## 8.அண்மையில் காலமான, 'Order of the British Empire' விருது பெற்ற இராம்னிக்லால் சோலங்கி, எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?

அ. விளையாட்டு

ஆ. வணிகம்

**இ. இதழியல் ☑**

ஈ. நாடகம்



❖ மூத்த குஜராத்தி மொழி இதழாளரும், பிரிட்டனில் உள்ள ஆசிய ஊடகங்களின் முன்னோடியுமான இராம்னிக்லால் சோலங்கி, அண்மையில் காலமானார். மும்பையைச் சார்ந்த ஜென்மபூமி குழுமத்தின் லண்டன் நிருபராக அவர் பணியாற்றினார். கரவி குஜராத் வார இதழ் மற்றும் ஆசிய ஊடக குழுமத்தின்

நிறுவனர்–ஆசிரியராகவும் அவர் இருந்தார். கடந்த 1997ஆம் ஆண்டில், 'பிரிட்டிஷ் பேரரசின் மரியாதை' மற்றும் 2007ஆம் ஆண்டில், 'CBE' என்னும் மிகவுயர்ந்த மரியாதையும் அவருக்கு வழங்கப்பட்டது.

**9.வங்கிகளின் கடன் விகிதங்களைக் குறைக்க உதவுவதற்காக, 1 ஆண்டு & 3 ஆண்டு காலவரையறை கொண்ட, 'LTRO'க்களை இந்திய ரிசர்வ் வங்கி நடத்துகிறது. இதில், 'LTRO' என்பது எதைக் குறிக்கிறது?**

அ. Long Term Reverse Operation

ஆ. Liquidity Term Repo Operation

இ. Liquidity Term Reverse Operation

**ஈ. Long Term Repo Operation ☑**




❖ வங்கிகளின் கடன் விகிதங்களைக் குறைக்க உதவுவதற்காக, 1 ஆண்டு & 3 ஆண்டு காலவரையறை கொண்ட 'நீண்டகால ரெப்போ நடவடிக்கைகளை – LTRO' இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நடத்துகிறது.

❖ சமீபத்திய இருமாத கொள்கை மறுஆய்வின்போது, கொள்கை ரெப்போ விகிதத்தில் ₹1 டிரில்லியனுக்கு 1 ஆண்டு மற்றும் 3 ஆண்டு காலவரையில் மறு கொள்முதலுக்கான (term repurchase) ஒப்பந்தங்களை RBI அறிவித்திருந்தது. பிப்ரவரி 17, பிப்ரவரி 24 மற்றும் மார்ச் 1 ஆகிய தேதிகளில் ரிசர்வ் வங்கி மூன்று நீண்டகால ரெப்போ நடவடிக்கைகளை நடத்தியுள்ளது. நான்காவது நடவடிக்கை வரும் மார்ச் 9 அன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மூன்றாண்டு காலவரையறையின் மூன்றாவது LTRO'இல், ரிசர்வ் வங்கி ₹1.71 டிரில்லியன் மதிப்பிலான 66 ஏலங்களைப் பெற்றது.

**10.ஓய்வுபெற்ற பின்னர் தனது பணியாளர்களுக்கு சேவை நீட்டிப்பு வழங்கும் கொள்கையை சமீபத்தில் இரத்துசெய்த மாநில அரசு எது?**

அ. ஒடிசா

ஆ. இராஜஸ்தான்

**இ. பஞ்சாப் ☑**

ஈ. உத்தரபிரதேசம்




❖ பணிஓய்வுபெற்ற பின்னர் மாநில அரசாங்க ஊழியர்களுக்கு சேவையில் விருப்ப நீட்டிப்பை வழங்கும் கொள்கையை பஞ்சாப் மாநில அரசு சமீபத்தில் இரத்துசெய்தது. இந்த முடிவு மாநில இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கத்துடன் எடுக்கப்பட்டுள்ளது. 60 அல்லது 62 வயது வரை அனைத்து ஊழியர்களுக்கும் சேவை நீட்டிப்பை வழங்க அம்மாநில அரசு முன்பு அனுமதித்திருந்தது. அண்மையில், ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை அறுபதிலிருந்து ஐம்பத்தெட்டாக மாற்றியது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தமிழ்நாட்டில் அரியலூர், கள்ளக்குறிச்சி பகுதியில் புதிதாக மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ள நிலையில், அதுதொடர்பான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

### 1.இராஜீவ் குமாரை அடுத்து இந்தியாவின் புதிய நிதிச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ. துகின் காந்த் பாண்டே

**ஆ. அஜய் பூஷண் பாண்டே ☑**

இ. அதானு சக்ரவர்த்தி

ஈ. ரகுராம் ராஜன்



❖ இந்தியாவின் புதிய நிதிச்செயலாளராக தற்போதைய வருவாய் செயலர் அஜய் பூஷண் பாண்டேவை நியமிப்பதற்கு, அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. வயது மூப்பின் காரணமாக கடந்த மாதம் பணிஓய்வுபெற்ற முன்னாள் நிதிச்செயலாளர் இராஜீவ் குமாரை அடுத்து அஜய் பூஷண் பாண்டே இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். நிதியமைச்சகத்தின் அனைத்து செயலாளர்களிலும் மிக மூத்தவரும் அதிகாரம்மிக்கவருமாக இருப்பவர் பொதுவாக நிதிச்செயலாளர் எனப்படுகிறார். தேபாசிஷ் பாண்டா, அண்மையில் நிதிச்சேவைத்துறையின் செயலாளராக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### 2.அரசு ஊழியர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டை, லோக்பால் விசாரித்து தீர்த்துவைப்பதற்கான காலவரையறை என்ன?

அ. 21 நாட்கள்

**ஆ. 30 நாட்கள் ☑**

இ. 45 நாட்கள்

ஈ. 60 நாட்கள்

❖ லோக்பால் என்பது நடுவணரசு ஊழியர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஓர் உச்சபட்ச அமைப்பாகும். பெறப்பட்ட எந்தவொருபுகாரையும் லோக்பால் 30 நாட்களுக்குள் விசாரித்து தீர்வுகாணும். லோக்பாலின் முதல் தலைவராக, நீதிபதி பினாக்கி சந்திர கோசுக்கு குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் கடந்த ஆண்டு மார்ச் மாதம் சத்தியப்பிரமாணம் செய்துவைத்தார். சமீபத்தில், அரசு ஊழியர்களுக்கு (பிரதம அமைச்சர் உட்பட) எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை லோக்பாலில் தாக்கல் செய்வதற்கான நடைமுறைகளை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

### 3. 'முதலமைச்சர் தால் பட் யோஜனா' என்பது எந்த மாநில அரசின் மானிய உணவுத் திட்டமாகும்?

அ. உத்தரபிரதேசம்

ஆ. பீகார்

**இ. ஜார்கண்ட் ☑**

ஈ. மேற்கு வங்கம்



❖ ஜார்க்கண்ட் மாநில அரசு, அண்மையில், 2020–21ஆம் நிதியாண்டுக்கான தனது வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தது. வேலையற்ற பட்டதாரி மற்றும் முதுகலை பட்டதாரி இளையோர்களுக்கு ஆண்டுக்கு ₹5000 முதல் ₹7000 வரை நிதியுதவி வழங்கப்படும் அதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ 100 அலகு இலவச மின்சாரம் வழங்கவும், மாநிலம் முழுவதும் 100 மொஹல்லா பரமாரிப்பு மையங்கள் அமைக்கவும் அம்மாநில அரசு முன்மொழிந்துள்ளது. மாநிலத்தின் ஏழை மக்களுக்கு ₹5 விலையில் உணவு வழங்குவதற்காக, 'முதலமைச்சர் தால் பட் யோஜனா' என்றவொரு திட்டத்தையும் அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

**4.மார்ச் 1–7 வரையிலான காலப்பகுதி, நாடு முழுவதும் எதன் நினைவு வாரமாக கொண்டாடப்படுகிறது?**



அ. தூய்மை இந்தியா வாரம்

ஆ. வேளாண் வாரம்

**இ. ஜன ஆஷாதி வாரம் ☑**

ஈ. பெண் குழந்தைகள் பாதுகாப்பு வாரம்

❖ 2020 மார்ச் 1 முதல் மார்ச் 7 வரை ஜன ஆஷாதி வாரமும், மார்ச் 7 அன்று ஜன ஆஷாதி வெற்றிநாளும் கொண்டாடப்படுகிறது. இந்த வாரத்தின்போது, உடல்நலப் பரிசோதனை முகாம், இலவச மருத்துவர் ஆலோசனை, இலவச மருந்து விநியோகம் போன்ற பல நடவடிக்கைகள் ஜன ஆஷாதி மையங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்றன. "பிரதான் மந்திரி பாரதிய ஜன ஆஷாதி பரியோஜனா" என்பது இரசாயன மற்றும் உர அமைச்சகத்தின்கீழ் இயங்கிவரும் மருந்துகள் துறையின் ஒரு முயற்சியாகும். அனைத்து மக்களுக்கும் மலிவு விலையில் தரமான மருந்துகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

**5.2020 மார்ச் மாதத்துக்கான ஐ.நா பாதுகாப்புக்குழுவின் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்ட நாடு எது?**



அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. ஜப்பான்

ஈ. நேபாளம்

❖ ஐ.நா பாதுகாப்புக்குழுவின் 2020 மார்ச் மாதத்தின் தலைவர் நாடாக சீனா பதவியேற்றுள்ளது. பன்னாட்டளவில் அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்காக, ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தால் இப் பாதுகாப்புக்குழு நிறுவப்பட்டது. இந்த அவையில் பதினைந்து உறுப்பினர்கள் உள்ளனர் (ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் மற்றும் ஈராண்டு பதவிக்காலம் உடைய பத்து நிரந்தரமற்ற உறுப்பினர்கள்). இந்த 15 உறுப்பினர்களும், ஒவ்வொரு மாதமும் சுழற்சி அடிப்படையில் ஐ.நா பாதுகாப்புக் குழுவின் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்கிறார்கள்.

**6.சுற்றித்திரிகிற கால்நடைகளை தமது வீடுகளில் வளர்க்கும் வேளாண் பெருமக்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**



அ. மத்திய பிரதேசம்

ஆ. ஹரியானா

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. பீகார்

❖ போக்கிடமற்று வீதிகளில் சுற்றித்திரியும் கால்நடைகளை தமது வீடுகளில் வளர்ப்பதோடு அவைகட்கு தங்குமிடமும் வழங்க தயாராகவுள்ள உழவர் பெருமக்களுக்கு மாதந்தோறும் ₹900 நிதியுதவி வழங்க உத்தரபிரதேச மாநில அரசு செய்துள்ளதாக உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் அண்மையில் அறிவித்தார். உத்தரபிரதேச மாநில அரசும், அவ்வாறான கால்நடைகளுக்கு தங்குமிடம் ஏற்படுத்த முடிவுசெய்துள்ளதாக அறிவித்துள்ளது.

**7.கூட்டுறவு வங்கிகளை ஒழுங்காற்றுவதற்காக, ரிசர்வ் வங்கிக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க, எந்தச் சட்டம் திருத்தப்படவுள்ளது?**

அ. இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம்

**ஆ. வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் ☑**

இ. கூட்டுறவு சங்கங்கள் சட்டம்

ஈ. பல்மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டம்




❖ 2020ஆம் ஆண்டு வங்கி ஒழுங்குமுறை (திருத்த) மசோதா, மக்களவையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முன்மொழியப்பட்ட மசோதா, கூட்டுறவு வங்கிகளை ஒழுங் –காற்றுவதற்கு ரிசர்வ் வங்கிக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

❖ இம்மசோதா இந்திய ரிசர்வ் வங்கியைக்கொண்டு துறைமைத்திறம், மூலதன அணுகல் மற்றும் வங்கி நடைமுறைகளை மேம்படுத்துவதன்மூலம் கூட்டுறவு வங்கிகளை வலுப்படுத்த முயற்சி செய்கிறது. நிர்வாகச்சிக்கல்கள் அனைத்தும் கூட்டுறவு பதிவாளராலேயே வழிநடத்தப்படும்.

**8.வர்த்தகம் தொடர்பான சட்டத்துக்குப்புறம்பான பணப்புழக்கங்கள் குறித்த அண்மைய அறிக்கையின்படி, 135 நாடுகளுள் இந்தியா பெற்றுள்ள இடம்?**

அ. ஒன்று

**ஆ. மூன்று ☑**

இ. ஐந்து

ஈ. ஏழு



❖ Global Financial Integrity என்னும் அமெரிக்காவைச் சார்ந்த மதியுரையகம், அண்மையில், "135 வளரும் நாடுகளில் வர்த்தகம் தொடர்பான சட்டத்துக்குப் புறம்பான பணப்புழக்கங்கள்: 2008–2017" என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, சீனா ($457.7 பில்லியன் டாலர்), மெக்ஸிகோ, இந்தியா, இரஷ்யா மற்றும் போலந்து ஆகிய நாடுகள் முதல் ஐந்து இடங்களில் உள்ளன.

❖ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.05 சதவீதத்திற்கு சமமான $83.5 பில்லியன் டாலர் நிதியுடன் (₹6.14 டிரில்லியன்) அரசாங்கத்தின் வரி வலையிலிருந்து தப்பிக்கும் மூன்றாவது மிகவதிக வர்த்தகம் தொடர்பான சட்டவிரோத பணப்புழக்கம் இந்தியாவில் உள்ளது.

**9. 128ஆவது, 'Commonwealth Points of Light' விருதைப் பெற்றவர் யார்?**



அ. இராஜேந்திர சிங்

**ஆ. ஜாதவ் பயெங் ☑**

இ. அஃப்ரோஸ் ஷா

ஈ. சுதர்ஷன் பட்நாயக்

❖ 'வன மனிதன்' என பொதுவாக அழைக்கப்படும் சுற்றுச்சூழல் ஆர்வலரான ஜாதவ் பயெங், 128ஆவது 'Commonwealth Points of Light' விருதைப் பெற்றுள்ளார். 57 வயதான இவர், பிரம்மபுத்திரா ஆற்றின் கரையில் உள்ள தனித்துவிடப்பட்ட ஒரு மணல்திட்டை வனவிலங்குகளுக்கான ஒரு பரந்த தங்குமிட –மாக மாற்றியுள்ளார். சமூகத்திற்கு சிறப்பான பங்களிப்புகளை அளித்துவரும் 53 காமன்வெல்த் நாடுகளில் உள்ள தனிநபரை இந்த விருது அங்கீகரிக்கிறது.

**10.பொதுப்போக்குவரத்தை இலவசமாக்கிய உலகின் முதல் நாடு எது?**





அ. தாய்லாந்து

**ஆ. லக்சம்பர்க் ☑**

இ. கனடா

ஈ. பிரேசில்

❖ ஒரு சிறிய ஐரோப்பிய நாடான லக்சம்பர்க் இரயில்கள், டிராம்கள் மற்றும் பேருந்துகள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து அமைப்புகளில் பயணங்கள் மேற்கொள்வதற்கான கட்டணங்களை ரத்துசெய்துள்ளது. இதன்கீழ், தொடரிகளில் முதல்வகுப்பு பயணத்துக்கும் பேருந்துகளில் இரவுநேர பயணத்துக்கும் மட்டும் கட்டணம் செலுத்தினால் போதும். இதன்மூலம் பொதுப்போக்குவரத்தை இலவசமாக்கிய முதல் நாடு என்ற பெருமையை லக்சம்பர்க் பெற்றுள்ளது.

❖ போக்குவரத்து நெரிசல் மற்றும் மாசுபாட்டைக் கையாள்வதற்கும், நாட்டின் குறைந்த வருவாய் ஈட்டுபவ –ர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது, சிறந்த பொதுப்போக்குவரத்துத் தரம் மற்றும் தூய்மையான சூழலை உறுதிசெய்யும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தமிழ்நாட்டின் 8 மாவட்டங்களில், உணவு பதப்படுத்தும் தொழில்சார்ந்த எட்டுத் திட்டங்களுக்கு, மத்திய உணவு பதப்படுத்துதல், தொழிற்துறை அமைச்சர் ஹர்சிம்ரத் கவுர் பாதல் தலைமையில் நடைபெற்ற மத்திய அரசின் பல்துறை அமைச்சகங்களுக்கு இடையிலான குழு ஒப்புதல் அளித்துள்ளது.

- உணவு பதப்படுத்தும் தொழிற்துறையின் கிசான் சம்பத யோஜனா திட்டத்தின், உணவு பதப்படுத்தும் தொகுப்புத் திட்டத்தின்கீழ், சுமார் ₹230 கோடி மதிப்பீட்டில் இந்தத்திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

    - இந்தத் தொழில் வளாகங்கள் அமைக்கப்படுவதன்மூலம் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் பெருமளவில் உருவாக்கப்படும். சுமார் 8000 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், இந்தத் தொழில் வளாகங்கள் அமைக்கப்படும் பகுதியைச் சேர்ந்த சுமார் 32,000 விவசாயிகளும் பயனடைவார்கள்.

- உலகம் முழுவதும் மார்ச் 8 அன்று சர்வதேச பெண்கள் நாள் கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு, சென்னை உயர்நீதிமன்ற வரலாற்றில் முதன்முறையாக 3 பெண் நீதிபதிகள்கொண்ட முழு அமர்வு, தொழிலாளர் அரசு காப்பீட்டுத்திட்டம் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பொருந்துமா, பொருந்தாதா என்பது குறித்த வழக்கை விசாரிக்கின்றனர்.

    - சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி, இந்த அமர்வை அமைத்து உத்தர –விட்டுள்ளார். அதன்படி, நீதிபதிகள் புஷ்பா சத்தியநாராயணா, அனிதா சுமந்த், பி.டி.ஆஷா ஆகியோர் அடங்கிய முழு அமர்வு இவ்வழக்கை விசாரிக்கின்றனர்.

- சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் போர் வீரர்கள் பயன்படுத்திய போர் பதக்கம், கரூர் மாவட்டம், குளித்தலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

- தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே வீரிருப்பு கிராமத்தில் கட்டப்பட்டுள்ள 100 அடி உயர உலக அமைதி கோபுரம் மார்ச்.4 அன்று திறக்கப்பட்டது. இது, தென்னிந்தியாவில் கட்டப்பட்ட முதல் அமைதி கோபுரமாகும்.

## நடப்பு நிகழ்வுகள்

**1.உயர்கல்விக்கு வழங்கப்படும் கடன்களுக்கு கடன் உத்தரவாதத்தை வழங்குவதாக அண்மையில் அறிவித்த மாநில அரசு எது?**

அ. ஒடிசா

**ஆ. ஹரியானா ☑**

இ. ஜார்க்கண்ட்

ஈ. பீகார்

❖ உயர்கல்விக்கு வழங்கப்படும் கடன்களுக்கு கடன் உத்தரவாதத்தை வழங்குவதாக அண்மையில் ஹரியானா முதலமைச்சர் அம்மாநில பட்ஜெட் அமர்வின்போது அறிவித்தார். இதனால், மாணவர்கள் வங்கிகளால் கேட்கப்பெறும் பிணை உத்தரவாதமின்றி கடன்களைப்பெறமுடியும். வெளிநாடுவாழ் இந்தியர்களின் (NRI) நலன் மற்றும் வேலைவாய்ப்புக்காக ஒரு தனி அயல்நாட்டு ஒத்துழைப்புத் துறையையும் அம்மாநில அரசு உருவாக்கியுள்ளது.

**2.அண்மைய QS உலக தரவரிசையில், மிகவுயர்ந்த தரத்தைப் பெற்றுள்ள இந்திய பொறியியல் கல்லூரி எது?**

அ. ஐஐடி கரக்பூர்

ஆ. ஐஐடி மெட்ராஸ்

இ. ஐஐடி கான்பூர்

**ஈ. ஐஐடி மும்பை ☑**

❖ அண்மைய QS உலக தரவரிசைப்படி, மும்பை மற்றும் தில்லியில் அமைந்துள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் (IIT) உலகெங்கிலும் உள்ள சிறந்த 50 பொறியியல் கல்லூரிகளுள் ஒன்றாக உள்ளன. IIT மும்பை 44ஆவது இடத்தையும், IIT தில்லி 47ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. கலை மற்றும் மனிதநேயம் தொடர்பான QS உலக தரவரிசைப்படி, தில்லியின் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் 162ஆவது இடத்திலும், தில்லி பல்கலைக்கழகம் 231ஆவது இடத்திலும் உள்ளது.

**3. 10 பொதுத்துறை வங்கிகளை நான்கென இணைத்தபிறகு, இந்தியாவில் அரசுக்கு சொந்தமான மொத்த வங்கிகளின் எண்ணிக்கை என்னவாக இருக்கும்?**

அ. எட்டு

ஆ. பத்து

**இ. பன்னிரண்டு ☑**

ஈ. பதினான்கு

12

❖ 10 பொதுத்துறை வங்கிகளை 4 பொதுத்துறை வங்கிகளாகப் பெரும் இணைப்பு செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்படி, ஓரியண்டல் வணிக வங்கி–யுனைடெட் பேங்க் ஆப் இந்தியா ஆகியவை பஞ்சாப் தேசிய வங்கியுடனும், சிண்டிகேட் வங்கி–கனரா வங்கியுடனும், ஆந்திரா

வங்கி–கார்ப்பரேஷன் வங்கி ஆகியவை யூனியன் பேங்க் ஆப் இந்தியாவுடனும், அலகாபாத் வங்கி–இந்தியன் வங்கியுடனும் இணைக்கப்படுகின்றன. இந்த இணைப்பு 1.4.2020 முதல் அமலுக்கு வரும். இந்தச் செயல்முறைக்குப்பிறகு, இந்தியாவில் மொத்தம் 12 பொதுத்துறை வங்கிகள் இருக்கும்.

**4.அண்மைய, 'நேரடி வரிகள் மசோதா–2020'இன்படி, வரி செலுத்துவோர், தள்ளுபடியுடன் உரிய வரித் தொகையை செலுத்துவதற்கான கால அவகாசம் என்ன?**

அ. மார்ச் 31, 2020 ☑




ஆ. மே 31, 2020

இ. செப்டம்பர் 30, 2020

ஈ. டிசம்பர் 31, 2020

❖ மக்களவையில், 'நேரடி வரிகள் மசோதா–2020' நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், பிப்.5 அன்று மக்களவையில் தாக்கல்செய்தார். இம்மசோதாவின்படி, வரி செலுத்துவோர் தங்களின் நிலுவை வரித்தொகையை வரும் மார்ச் 31ஆம் தேதிக்குள் செலுத்தினால் வட்டியோ, அபராதமோ வசூலிக்கப்படாது. அதேவேளையில் நிலுவை வரித்தொகையுடன் பத்துச்சதவீத கூடுதல்வரி செலுத்தவேண்டும்.

**5. 'பிரக்யான் கருத்தரங்கம் – 2020' என்பது இந்தியாவின் எந்த ஆயுதப்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சர்வதேச கருத்தரங்கமாகும்?**

அ. இந்திய விமானப்படை



ஆ. இந்திய கடற்படை

**இ. இந்திய இராணுவம் ☑**

ஈ. இந்திய கடலோர காவல்படை

❖ தரைவழிப் போர்முறை ஆய்வுகள் மையம் (CLAWS) 'பிரக்யான் கருத்தரங்கம் – 2020' என்ற இரண்டு நாள் இந்திய இராணுவ சர்வதேச கருத்தரங்கை ஏற்பாடுசெய்துவருகிறது. இந்தக்கருத்தரங்கு, புது தில்லியில், 2020 மார்ச் 04 அன்று தொடங்கியது. இந்த நிகழ்வு, தேசிய மற்றும் சர்வதேச இராணுவ வல்லுநர்களுக்கு, 'தரைவழிப்போர்முறையின் சிறப்பியல்புகளை மாற்றுதல் மற்றும் இராணுவத்தின் மீதான அதன் தாக்கம் – Changing Characteristics of Land Warfare and its Impact on the Military' என்ற தலைப்பில் விவாதம் மேற்கொள்ள ஒரு தளத்தை உருவாக்கித்தந்தது.

**6.சுவேதா ராவத் மற்றும் ஷாலினி குப்தா ஆகியோர் தொடர்புடைய துறை எது?**

அ. விளையாட்டு



ஆ. இதழியல்

**இ. அறிவியல் ☑**

ஈ. வணிகம்

- DRDOஇன் உடலியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல் கழகத்தின் (DIPAS) சுவேதா ராவத் மற்றும் IIT தில்லியின் வேதிப்பொறியியல் துறையைச் சார்ந்த ஷாலினி குப்தா ஆகிய இரு அறிவியலா –ளர்களுக்கும் அண்மையில், குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் அவர்கள், "சமூக நலனுக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் இளம் பெண்களுக்கான தேசிய விருதினை" வழங்கினார்.

- Dr. சுவேதா ராவத், ஒரு பெண்ணுக்கான முழு உடல் பாதுகாவலரை உருவாக்கியுள்ளார். அதேசமயம், Dr. ஷாலினி குப்தா, குருதி நுண்ணுயிர் பெருக்க நோய்க்கான சிகிச்சைக்காக, 'SeptifloTM' என்னும் தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக உருவாக்குவதற்கு வழிகாட்டியுள்ளார்.

**7.போத்தல் குடிநீரின் சில்லறை விற்பனை விலையை குறைப்பதற்கு, அண்மையில் உத்தரவு பிறப்பித்த மாநில அரசு எது?**



அ. உத்தரபிரதேசம்

ஆ. உத்தரகண்ட்

இ. கர்நாடகம்

**ஈ. கேரளம் ☑**

- ₹20 என இருந்த போத்தல் குடிநீரின் சில்லறை விற்பனை விலையை லிட்டர் ஒன்றுக்கு ₹13 என நிர்ணயித்து கேரள மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. போத்தல் தண்ணீர் ஓர் அத்தியாவசியப் பொருள் என்பதால் இந்தவிலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. கேரள மாநில உணவு வழங்கல் துறை இந்த உத்தரவை பிறப்பித்ததோடு, இந்தப் புதிய விலை வரம்பை விற்பனையாளர்கள் பின்பற்றவும், இப்புதிய விலையை அனைத்து போத்தல்களிலும் அச்சிடவும் கேட்டுக்கொண்டது.

**8.அயல்நாடுகளில் உள்ள இந்திய நிறுவனங்களைப் பட்டியலிடுவதற்கு, அண்மையில் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள இந்தச்சூழலில், 'GDR' என்பது எதைக்குறிக்கிறது?**



அ. Government Deposit Receipts

ஆ. Global Deposit Receipts

**இ. Global Depository Receipts ☑**

ஈ. Government Depository Receipts

- அயல்நாடுகளில் உள்ள இந்திய நிறுவனங்களின் நேரடி பட்டியலை தயாரிக்கும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. இதற்காக, நிறுவனங்கள் சட்டம், 2013'இல் பொருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். மிகச்சில இந்திய நிறுவனங்களுக்கு, உலகளாவிய வைப்பகப் பற்றுச்சீட்டுகள் Global Depository Receipts (GDR) உள்ளன. சிலவற்றில் மட்டுமே அமெரிக்க வைப்பகப் பற்றுச்சீட்டுகள் (ADR) உள்ளன; அந்நிறுவனங்களால் அமெரிக்காவில் வர்த்தகம் மேற்கொள்ளலாம்.

- ஒரு வைப்பகப் பற்றுச்சீட்டு என்பது வெளிநாட்டு நாணயத்தைக் குறிக்கும் ஒரு கருவியாகும். இது, ஓர் அயல்நாட்டு நிறுவனத்தால் ஓர் உள்நாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்படுகிறது. மேலும், பன்னாட்டுப் பரிமாற்றகத்திலும் அது பட்டியலிடப்பட்டுள்ளது.

**9. 'சிவில் விமானப்போக்குவரத்து தொடர்பான அந்நிய நேரடி முதலீட்டுக்கொள்கை'யில் மேற்கொண்ட அண்மைய திருத்தத்தின்படி, வெளிநாடுவாழ் இந்தியர்கள் (NRI), ஏர் இந்தியாவில், பங்குகளை வாங்குவதற்கான வரம்பு என்ன?**

அ. 26%

ஆ. 49%

இ. 76%

**ஈ. 100% ☑**

❖ ஏர் இந்தியா நிறுவனத்தில் வெளிநாடுவாழ் இந்தியர்கள் 100% வரை முன்அனுமதி பெறாமல் முதலீடு செய்ய அனுமதிக்கும் வகையில், தற்போதுள்ள வெளிநாட்டு முதலீடு அனுமதிக்கொள்கையில் திருத்தம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது விமானப்போக்குவரத்துச் சேவை / உள்நாட்டுப் பயணிகள் விமான சேவை ஆகியவற்றில் 100 சதவீத வெளிநாட்டு நேரடி முதலீடு என்பது அனுமதி பெறாமல் 49 சதவீதமாகவும், அதற்கும் கூடுதலானது அரசு அனுமதி பெற்றும் என உள்ளது.

**10. P A சங்மா ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் அமையவுள்ள மாநிலம் எது?**

அ. அசாம்

**ஆ. மேகாலயா ☑**

இ. திரிபுரா

ஈ. நாகாலாந்து



❖ மேகாலய மாநில முதலமைச்சர் கான்ராட் K சங்மா, சமீபத்தில் துரா மாவட்டத்தில் ஓர் ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். இந்த வளாகத்திற்கு அம்மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் P A சங்மாவின் பெயர் சூட்டப்படவுள்ளது. ₹125 கோடி மதிப்பிலான இந்தத் திட்டத்தில், ஒரு கால்பந்து மைதானம் மற்றும் பல்நோக்கு உட்புற மைதானம் ஆகியவை அடங்கும்.

❖ இந்த வளாகத்தின் கட்டுமானத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசு ஆகியவை இணைந்து நிதியளிக்க உள்ளன. வரும் 2022ஆம் ஆண்டில், மேகாலயா, தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது. அதற்குள் இதன் கட்டுமானப்பணிகள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- பாரம்பரிய இயற்கை விவசாயத்தில் விளைந்த பங்கனப்பள்ளி, அல்போன்சா, இமாம்பசந்த் உள்ளிட்ட மாம்பழ ரகங்கள் அரபு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு முதன்முறையாக ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. இந்த மாம்பழங்கள், தரப்பரிசோதனைக்குப்பிறகு, "பரம்பராகத் கிருஷி விகாஸ் யோஜனா" என்ற முத்திரை மற்றும் பட்டைக் குறியீட்டுடன் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன.
- நாமக்கல்லில் புதிய அரசு மருத்துவக்கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழா மார்ச்.5 அன்று நடந்தது. இந்தக்கல்லூரியின் முதல்வராக மருத்துவர் சாந்தா அருள்மொழி நியமிக்கப்பட்டுள்ளார்.
- திராவிட இயக்கத்தின் முதுபெரும் தலைவரும் முன்னாள் நிதியமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் (திமுக) பொதுச்செயலாளருமான பேராசிரியர் க. அன்பழகன் (97) காலமானார்.